தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, மார்கழி 23, திருவள்ளுவர் ஆண்டு 2049

2019 ஜனவரி 7, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு.”

பயம் இல்லாதிருத்தல், ஏழைக்குக் கொடுக்கும் கொடை, சிறந்த அறிவு, மிகுந்த ஊக்கம் இந்த நான்கினையும் குறை இல்லாமல் நிறைவாகப் பெற்றிருப்பவர் சிறந்த ஆட்சியாளர் ஆவார்.

1. வினாக்கள்–விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

21—

சொந்தக் கட்டடம்

***6248—திரு. நா. கார்த்திக்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர், பீளமேடு கிழக்கு பகுதியிலுள்ள தமிழ்நாடு மின் பகிர்மான அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[2019 ஜனவரி 7

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேற்றைய தினமே இதை துணைக் கேள்வியாகக் கேட்டிருந்தார். அதே கேள்வியே இப்பொழுது மீண்டும் வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி, இப்பொழுது மின் கட்டணம் வசூலிக்கும் கட்டடத்திலேயேதான் A.E. Office இயங்கிக்கொண்டிருக்கிறது. புதிதாக இடம் தேர்வு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அங்குள்ள என்.டி.சி. ரங்கவிலாஸ் மில்லின் இடத்தை வேண்டுமென்று கேட்டு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம். அதற்கான ஒப்புதல் வரப்பெற்ற பின்னர், அந்த இடத்தில் மின் வாரிய அலுவலகத்திற்கான கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடந்த சனிக்கிழமை அன்று இதே கேள்வியை துணைக் கேள்வியாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டிருந்தேன். வேறு இடம் தேர்வு செய்து அதை கட்டித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கோவை மாநகராட்சி, சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட 75–வது வட்டத்தில் மேற்கு புதூர் பகுதியில் அருள்மிகு கருமாரியம்மன் திருக்கோயில் இருக்கிறது. இத்திருக்கோயிலின் அருகிலேயே அதாவது 15 அடி தூரத்தில் ஒரு மின்மாற்றி (transformer) இருக்கிறது. இந்த மின்மாற்றி கிட்டத்தட்ட 50 ஆண்டு காலத்திற்கும் மேலாக அந்த இடத்தில் இருந்துகொண்டிருக்கிறது. ஏழை, எளிய மக்கள் வாழக்கூடிய ஒரு நெருக்கமான பகுதியாக அந்தப் பகுதி இருக்கிறது. தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அருள்மிகு கருமாரியம்மன் திருக்கோயிலுக்கு வந்து செல்கிறார்கள். விழாக் காலங்களில் அந்த இடத்தில் மிகப் பெரிய நெருக்கடி ஏற்படுகிறது. நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு

செய்யப்பட்டதற்குப் பிறகு கடந்த இரண்டு ஆண்டு காலத்திற்கும் மேலாக மின் வாரியத்தின் A.D.E. அவர்களுக்கும், தலைமைப் பொறியாளர் அவர்களுக்கும் அந்த மின்மாற்றியை வேறு இடத்திற்கு மாற்றச் சொல்லி தொடர்ந்து கடிதம் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், அந்த மின்மாற்றி இதுவரை மாற்றியமைக்கப்படவில்லை. குறிப்பாக, அந்த மின்மாற்றி சாய்ந்த நிலையிலும், கீழே தாங்கி நிற்கக்கூடிய கான்கிரீட் போஸ்டுக்குள் இருக்கும் இரும்பு துருப்பிடித்த நிலையிலும் இருக்கிறது. ஆகவே, பொதுமக்களுடைய நலனைக் கருதி, அந்த மின்மாற்றியை வேறு இடத்திற்கு மாற்றியமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கோயிலுக்குப் பக்கத்தில் அந்த மின்மாற்றி இருக்கிறது, அதை மாற்றித் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். இது நியாயமான கோரிக்கையாக இருக்கிறது. பொதுவாக மின்மாற்றியை ஓர் இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று சொன்னாலே, எந்த இடத்திற்கு மாற்றுகின்றோமோ அந்தப் பகுதி மக்கள் அதை இங்கே வைக்கக் கூடாது என்று ஆட்சேபணை தெரிவிக்கின்ற காரணத்தினால்தான் இதுபோன்று மின்மாற்றிகளை வேறு இடத்தில் மாற்றி வைப்பதில் சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அதனால்தான், சில இடங்களில் apartments கட்டும்போதுகூட மின்மாற்றியை அதாவது, transformer–ஐ உள்ளேயே வைப்பதற்கு இடம் கொடுங்கள் என்று கேட்கின்றோம். அதுபோன்று இடம் கொடுக்காத இடங்களிலெல்லாம் இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இடம் கோயில் பகுதியாக இருக்கின்றது; பக்தர்கள் நிறைய பேர் வந்து செல்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த இடத்தை உடனடியாக ஆய்வு செய்து, அருகிலேயே வேறு ஓர் இடத்தில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அந்த மின்மாற்றியை மாற்றி வைப்பதற்கு இடம் தேர்வு செய்கின்றபொழுது அந்தப் பகுதி மக்கள்

ஏதாவது ஆட்சேபணை தெரிவித்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த மக்களோடு பேசி, சமாதானம் செய்து தந்தால் உடனடியாக அந்த இடத்தில் மின்மாற்றியை மாற்றித் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.*

முற்பகல் 10–05

திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி, எங்களது தலைவர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், அன்றைக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் கோவை மாநகராட்சிப் பகுதி முழுவதும் பல வட்டங்களிலே புதைவடக் கேபிள்கள் பதிப்பதற்குண்டான ஆணை எங்களுடைய ஆட்சியில் பிறப்பிக்கப்பட்டது. இன்றைக்கு ஆங்காங்கே அனைத்து தெருக்களிலும் மின் கம்பங்கள் இருக்கின்றன. அந்த மின் கம்பங்களுக்குப் பதிலாக புதைவடக் கேபிள்கள் அமைக்கப்பட வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்திலே அவிநாசி சாலை, திருச்சி சாலை, காமராஜர் சாலை, கோவை தெற்கு தொகுதிக்குட்பட்ட கிராஸ் கட் சாலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலே மின் கம்பங்களெல்லாம் அகற்றப்பட்டு, புதைவடக் கேபிள்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மக்களுடைய போக்குவரத்து வசதியைக் கருதி, மக்கள் நெருக்கமாக இருக்கக்கூடிய பகுதிகள் மற்றும் முக்கியமான தெருக்கள் இருக்கக்கூடிய மாநகராட்சிப் பகுதி முழுவதும் புதைவடக் கேபிள்களைப் பதிப்பதற்கு இந்த அரசு மின்சாரத் துறையின் வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2019 ஜனவரி 7]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பகுதி மாநகராட்சிப் பகுதி. மாண்புமிகு அம்மா அவர்கள் மாநகராட்சிப் பகுதிகள் அனைத்தையும் புதைவடத் தடமாக மாற்ற வேண்டுமென்று ஏற்கெனவே உத்தரவிட்டிருக்கிறார்கள். இப்பொழுது சென்னை மாநகராட்சியின் added area–ல் பல பகுதிகளில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அனைத்து மாநகராட்சிகளிலும் இதுபோன்ற பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தற்பொழுது ஈரோடு மாநகராட்சியில் புதிதாக இப்பணிகளை ஆரம்பித்திருக்கிறோம். ஏற்கெனவே கோயம்புத்தூர் மாநகராட்சியிலும் இதுபோன்று பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இன்னும் பணிகள் நடைபெற வேண்டியிருக்கின்றன; இல்லையென்று சொல்லவில்லை. நிதிநிலைக்கேற்ப phased manner–ல், அதற்குண்டான நிதியை ஒதுக்கி, அந்தப் பணிகளையும் நாங்கள் கூடியவிரைவில் செய்வோம், அதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கஜா புயலினால் பாதிக்கப்பட்ட 4 மாவட்டங்களில் எந்த அளவுக்கு மின்சார ஊழியர்கள், மின்சார வாரியம் பணியாற்றியிருக்கிறது என்பதை ஒரு புத்தகமாகப் போட்டு அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கியிருக்கின்றேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு அது டேபிளில் வைக்கப்பட்டிருக்கிறது. நன்றாகவும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி தொகுதியிலே குறுகலான சாலைகள் அதிகமாக இருக்கின்றன. மின் கம்பங்களும், மின் கம்பிகளும் குடியிருப்புகளுக்கு மிக அருகில் செல்வதால் விபத்துகள் அடிக்கடி நிகழ்கின்றன. இப்பொழுது அவற்றை மாற்றுவதற்கான பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. இருந்தாலும் சில இடங்களில் அப்பணிகள் நடைபெறாமல் இருக்கின்றன. எனவே, அவற்றை தரை வழியாக, புதைவடத் தடங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மேலும்,

மக்களின் நீண்டகாலக் கோரிக்கை ஒன்று. வேளச்சேரி உருவான காலத்திலிருந்து ஒரு துணை மின் நிலையம்தான் இயங்கிவருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன் மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் இருவர் படுகாயமடைந்து, உயிர் பிழைத்தார்கள். மக்கள்தொகை பெருக்கம், வளர்ச்சி இவற்றைக் கருத்திற்கொண்டு வேளச்சேரிக்கு மேலும் ஒரு துணை மின் நிலையம் அமைத்திட வேண்டும். துணை மின் நிலையம் அமைத்திட அங்கே மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்தக் கோரிக்கையை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது, வேளச்சேரி பகுதியில் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன, இன்னும் சில இடங்களில் பணிகள் செய்ய வேண்டியிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதிலாகச் சொன்னேன். சென்னை மாநகராட்சியோடு புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளில் இப்பொழுது பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன பகுதிகளிலும் இப்பொழுது பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இருந்தாலும், ஆபத்தான பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் அந்தப் பணிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

வேளச்சேரி துணை மின் நிலையத்தில் கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்பாக fire accident, தீ விபத்து ஏற்பட்டது உண்மை. அதனால் கிட்டத்தட்ட 7, 8 மணிநேரம் மின் தடைபட்டது என்பதெல்லாம் உண்மை. உடனடியாகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இப்பொழுது fire accident ஏற்படாத அளவுக்கு நடவடிக்கை எடுத்து கட்டமைப்பை முழுமையாக மாற்றியிருக்கின்றோம். இருந்தாலும், அங்கே மின் பளு அதிகமாக இருக்கின்ற காரணத்தால் கூடுதலாக துணை மின் நிலையம் வேண்டுமென்றுதான் நாங்களும் கருதுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். 2 ஆண்டு காலத்தில், இதுகாறும் இல்லாத அளவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு கிட்டத்தட்ட 120 துணை மின் நிலையங்களை அமைத்திருக்கிறோம். மின்னழுத்தம் சீராக இருக்க வேண்டும்,

2019 ஜனவரி 7]

சீரான மின்சாரம் வழங்க வேண்டும் என்பதற்காகத்தான் இன்னும் எங்கெங்கு தேவையிருக்கின்றதோ, அந்த இடங்களில் இதுபோன்று துணை மின் நிலையங்களை அமைத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியிலே ஆய்வு செய்து இடமிருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.*

முற்பகல் 10–10

திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், மருங்கூர் உதவி மின் பொறியாளர் அலுவலகம் அந்த ஊராட்சிக்குச் சொந்தமான சமுதாயக் கூடத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருகிறது. அது மிகவும் பழுதடைந்து, இடிந்துவிழும் நிலையில் உள்ளது. அதற்குப் பதிலாக,* SS–Substation *அமைந்துள்ள கீழகுப்பம் பகுதியில் புதிய கட்டடம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், பண்ருட்டி ஒன்றியம், பேர்பெரியான்குப்பம் ஊராட்சி, முத்தாண்டிக்குப்பம், மாளிகம்பட்டு ஊராட்சி, பிள்ளையார்குப்பம், வல்லம் ஊராட்சி, கீழ்மாம்பட்டு ஊராட்சி, வெள்ளைபிள்ளை காலனி, காட்டுக்கூடலூர் முடப்பள்ளி போன்ற பகுதிகளில் குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. அப்பகுதிகளில் மின் வழித் தடங்கள் மிகவும் தாழ்வாகச் செல்கின்ற காரணத்தால், தீ விபத்துகள் அடிக்கடி ஏற்படுகின்றன. அவற்றை மாற்றியமைக்கக் கோரினால், அதிகாரிகள் மதிப்பீடு தயார் செய்து 3 இலட்சம், 4 இலட்சம் செலுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். தமிழ்நாடு மின்சார வாரியத்தின் முன்னாள் தலைவர், இந்நாள் தலைவர் ஆகியோரிடமெல்லாம் இதுகுறித்து எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதற்கு மாற்றுவழி கண்டு, அரசே செலவை ஏற்றுக்கொண்டு அத்தொகையைச் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் அல்லது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதற்கான நிதியை விடுவிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மொத்தம் 3,845 மின் அலுவலகக் கட்டடங்கள் இருக்கின்றன. அவற்றில் 1,699 கட்டடங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், துணை மின் நிலைய வளாகத்தில் இடம் இருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அவ்வாறு இடம் இருந்தால் உடனடியாக ஆய்வு செய்து அங்கே பொறியாளர் அலுவலகம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.*

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியில் மின் கம்பிகள் தாழ்வாகச் செல்கின்ற காரணத்தினால் அங்கே விபத்துகள் ஏற்படுவதாகச் சொல்லியிருக்கின்றார். மாதந்தோறும் நடத்தப்படும் ஆய்வுக் கூட்டத்தில், முதலில் விபத்தில்லாமல் இருக்க வேண்டும், மின் கம்பிகள் எங்கெங்கெல்லாம் தாழ்வாகச் செல்கின்றனவோ, அவற்றையெல்லாம் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுதான் அனைத்து அதிகாரிகளுக்கும் நாங்கள் அறிவுரை வழங்கிக் கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால், அவர் சொன்ன பகுதியில், ஏற்கெனவே மின் கம்பிகள் சென்று கொண்டிருந்திருக்கும், அதற்குப் பின்னர் அந்தக் குடிசைகளை அமைத்திருப்பார்கள் என்று நான் நினைக்கின்றேன். பொதுமக்கள் இவ்வாறு செய்யும்போதுதான் பிரச்சினையே ஏற்படுகின்றது. அந்த வழியாகச் செல்லும் மின் கம்பிகளுக்குக் கீழே குடிசைகள் போட்டுக்கொள்வதால், ஏதேனும் ஒரு சிறிய விபத்து என்றாலும்கூட, ஓலைக் குடிசைகளாக இருக்கின்ற காரணத்தினால் எளிதாகத் தீப்பற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. மின்சார வாரியத்தினுடைய செலவிலேயே மின் கம்பிகளை மாற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நிதி நிலைமை என்பது ஒருபுறம் இருந்தாலும்கூட, அதிலே ஒரு சிக்கல் இருக்கிறது. அவ்வாறு அரசே மாற்றினால், எதற்காக அரசின் செலவில் இதை மாற்றினீர்கள்? ஏதோ தேவையின்பொருட்டு, ஒருவருக்கு சலுகை செய்வதற்காக மாற்றியதாக audit objection *வந்துவிடுகிறது. எனவேதான், அதுபோன்று செய்வதில்லை. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அந்தச் செலவினத்தை மேற்கொள்ளலாமா என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்*

2019 ஜனவரி 7]

கேட்டிருக்கிறார்கள். அது அரசினுடைய கொள்கை முடிவு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி அதுகுறித்து முடிவு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

22—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***5394—திருமதி ம. கீதா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், வெள்ளியனை ஊராட்சி, திருமுடிக்கவுண்டனூரில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், வெள்ளியனை ஊராட்சி, திருமுடிக்கவுண்டனூர் கிராமத்தில் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், புதிதாக 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS